J. R. T. S. 1870. No. 5.

# RESURRECTION.

## உயிர்த்தெழுதல்.

### க. உயிர்த்தெழுநல் உண்டென்று விவிலிய வேதம் மாத்திரமே வெளிப்படுத்துகின்றது.

விவிலியவேதத்தை அறியாதிருந்தும் அதிவிவேகிகளாயிருந்த கல்விமான்களுக்குட் சிலர், சரீரத்திலும் ஆத்துமா மேன்மையானதென்று உணர்ந்து, சரீரத்தையின்றி ஆத்துமா சீவிக்குமென்று அனுமானித்ததனால், சரீரம் மரித்தபின்பு ஆத்துமா சீவிக்குமென்று எண்ணினார்கள். அதை நிச்சயிக்க அவர்களிடத்தில் வேதமில்லை. சரீரம் மரித்தபின் ஆத்துமா சீவிக்குமென்ற நம்பிக்கை ஓர் சந்தேக உத்தேசமேயன்றி வேறொன்றல்ல. அது சத்தியமாய் அல்லது அசத்தியமாயிருக்கலாம். ஆனால் அதை விவிலிய வேதமோ நிச்சயிக்கின்றது.

“நம்முடைய சமய குருவும் இரட்சகருமாகிய யேசுக்கிறிஸ்து மரணத்தைச் செயித்துச், சுவிசேஷத்தினால் சீவனையுஞ் சாவாமையையும் வெளிப்படுத்தினார்” என்று உதீமோத் ௧: ௰ வசனத்திற் காணப்படுகிறது.

மேலே சொன்ன கலைஞானிகள், மரணத்தின்பின் ஆத்துமா சீவிக்குமென்று உத்தேசித்தாலும், சரீரம் எழுப்பப்பட்டு, ஆத்துமாவுடன் மறுபடி இணைக்கப்படுமென்ற சத்தியம் அவர்களுடைய புத்தியிற் தோன்றவேயில்லை. இதை விவிலிய வேதமே போதிக்கின்றது. “யேசு நானே உயிர்த்தெழுதலுஞ் சீவனுமாயிருக்கிறேன்” என்கிறார். யோவான், ௧௧ : ௨௫. அவர் உயிர்த்தெழுதலுக்குமாத்திரங் காரணரல்ல, சரீரத்தின் உயிர்த்தெழுதலுக்கும் ஆத்துமாவின் சீவியத்துக்குங் காரணர்.

மேலும், யோபு ௧௯: ௨௭. எசாயா ௨௬: ௧௯. யோவான் ௫: ௮, ௨௯ வாசிக்க.

நீர் அவரை நேசியாமலும் எளியோர்க்கு உதவி
செய்யாமலும் அறிவீனர்க்குப் போதியாமலு
ம் பிறரை நேசியாமலும் விட்டு வனவாசியாயி
ருந்து தவசுபண்ணி யோகாப்பியாசஞ் செய்
துவருவது உம்மைச் சுத்தமாக்கமாட்டாது.
அதனால் நீர் செய்த செய்கை மோட்சகாரண
மல்லவென்பது சரிதான் என்றார்கள்.

அவர் இதைக் கேட்டவுடனே ஆம், உத்தம
ர்களே, நீங்கள் சொன்னது மெய்தான். நான் இ
துவரைக்கும் பிறரை நேசியாததுந் தேவனை
நேசியாததும் மனிதர் என்னை யோக்கியனெ
ன்று மதித்து மெய்ச்சிக்கொள்ளத் தக்க வரப்
பிரசாதங்களைப் பெறவேண்டுமென்ற வீண் ஆ
சை என்னிடத்தில் இருந்ததும் என்னை நரகத்
திற்கு ஏதுவாக்கிற்று. இவ்விதமான தவங்களி
னாலும் யோகங்களினாலும் நரகத்திற்குத் தப்
பிக்கொள்ள ஒரு வகையையுங் காணவில்லை. உ
ங்கள் மார்க்கத்தின்படி ஆத்தும இரட்சிப்பு எ
வ்வகையென்பதை என் மனந் தெளியச்சொல்
ல வேண்டுமென்று அழுதழுது கேட்டார். அ
ப்பொழுது அந்தக் குருமார் அவரை அன்பா
கப்பார்த்து எங்கள் மார்க்கத்தில் இரட்சிப்பு
ண்டென்பது மெய்தான். அதைப் பெறும்படி
இயேசுக்கிறிஸ்து என்னும் இரட்சகரை ஏற்று
விசுவாசிக்க வேண்டும் என்றார்கள்.

இதைச் சொன்னவுடனே பிராமணன் இயே
சுக்கிறிஸ்து யார் என்றும் அவர் எப்படிப்பட்
டவர் என்றும் அவரை விசுவாசிக்கிற விதம் எ
ன்னவென்றும் மிகவுங் கருத்தாகக் கேட்டார்.

அதற்கு அந்தக் குருமார் பிரபஞ்சகாரணகடவுள் பிதாக் குமாரன் பரிசுத்த ஆவி என்னும் நாமத்தினைக்கொண்டு திரியத்துவராய் இருக்கிறாரென்று சத்தியவேதஞ் சொல்லுகின்றது. இதிலேசொல்லியிருக்கிற குமாரன் தானே கிறிஸ்துநாதர். அவர் கடவுளானதினாலே தெய்வீகத்தையும் ஒரு கன்னியின் கெர்ப்பத்தில் மனுக்கோலமாய் உற்பவித்ததினால் மனுஷீகத்தையுங் கொண்டிருக்கிறார்

இவர் மனுக்கோலமாய் உதித்து யாரையும்போல உண்டு உறங்கி வளர்ந்து முப்பது வயதானபொழுது யோர்தான் என்னும் நதியிலே ஞானஸ்நானம்பெற்று அந்த நதியிலிருந்து கரையேறி வருகையில் வானந் திறபட்டு அதின் வழியாய்ப் பரிசுத்த ஆவியானவர் புறாவின் உருவமாக அவர் மேல் இறங்கி இருந்தார். அந்நேரமே இவர் நம்முடைய நேசகுமாரன். ஆகையால் சகலரும் இவர் சொல்லைக் கேட்கக்கடவீர்களென்று வானத்திலிருந்து தேவனால் வார்த்தை பிறந்தது.

சருவ வல்லமையுள்ளவராய் அவர் அன்று முதல் உலகத்தாருக்குப் போதித்ததுமன்றித் தமது திருவாக்கினால் அநேக வியாதிக்காரரைக் குணமாக்கிச் செத்தவர்களையும் உயிர்த்தெழுப்பி இவ்விதமான அளவில்லாத அற்புதங்களை நடப்பித்துத் தம்மைத் தேவனென்று காட்டிய பின்பு மனிதர் செய்த பாவத்தை நிவிர்த்தியாக்கும் பலியாகத் தமது சித்தத்தின்படி பொல்லாதவர்களுடைய கையிற் பிடிபட்டு வ

ருத்தமான பாடுகளையும் மரணத்தையும் அனுபவித்துக்கொண்டார்.

அவர் இப்படி மனித பாவ நிவிர்த்திக்கு ஏற்ற பலியாய்ப் பாடுபட்டு மரணித்தபொழுது பகலிற் பதினைந்து நாழிகை தொடங்கி இருபத்திரண்டரை நாழிகைமட்டுஞ் சூரியன் ஒளி மழுங்கிப்போனதினால் அந்தத் திசை முழுதும் இருண்டது பூமி அதிர்ந்தது. கற்பாறைகள் பிளந்தன. அவ்விடத்திற் கூடினவர்கள் இந்தக் காரியங்களைக் கண்டு பயந்து ஆச்சரியப்பட்டு இவர் யேகோவாவுடைய குமாரனென்பதற்குச் சந்தேகமில்லை என்றார்கள். மூன்றாம் நாளிலே இந்த மகிமையுள்ள கடவுள் உயிர்த்தெழுந்து நாற்பது நாளளவுந் தமது சீஷர்களைப் போஷித்து ஐந்நூறுபேரிலும் அதிகங்கொண்ட சனங்கள் சமூகத்திலே நாற்பதாம் நாளிலே தமது சீஷர் பார்த்துக்கொண்டிருக்க ஒருமுறை தோன்றி பரமண்டலத்துக்கு எழுந்தருளிப்போனார்.

மேலும் பரமண்டலத்திலிருந்து தமது நாமத்தை ஏற்ற சகலரும் ஆத்தும இரட்சிப்பை அடையத் தேடும்படி அனுக்கிரகஞ் செய்யப் பிதாவாகிய யேகோவாவைப் பார்த்து எப்பொழுதும் பரிந்து கேட்கிறார்.

அவர் உலகமுடிவிலே அளவற்ற வல்லமையோடும் மகிமைப் பிரதாபத்தோடும் வெளிப்பட்டு எல்லாரையுந் தமக்கு முன் நிறுத்தி நியாயம் விளங்கித் தங்கள் பாவங்களை வெறுத்துவிட்டுக் குணப்பட்டுத் தம்மை விசுவாசித்தவர்கள் மோட்சத்தையும் விசுவாசியாதவர்கள் நர

கத்தையும் அனுபவிக்கத் தீர்ப்பார். ஐயா, கிறிஸ்துநாதர் இப்படிப்பட்ட வல்லமையுள்ள கடவுளாகவே இருக்கிறார் என்பதைக் கண்டு கொள்ளும்.

அவரை விசுவாசிக்கிற விதமென்னவென்றுங் கேட்டீரே, சொல்லுகிறோம். கடலில் விழுந்து ஒரு தாபரமும் இல்லாமல் அமிழ்ந்திப் போகிறவன் ஒரு தோணியைக் கண்டவுடனே கரையேறும்படி அதையே பற்றிப் பிடிப்பது போலப் பாவத்தில் விழுந்து கெட்டு ஒரு தாபரமும் இல்லாமல் அமிழ்ந்திப் போற நாம் கிறிஸ்துவைப் பற்றுவதை விட வேறு என்ன செய்தாலும் நமது பாவத்தினின்று நீங்கிக் கரையேற மாட்டோம் என்பதைக் கண்டு உணர்ந்தபொழுதே அவரிடமாகப் போய் நீரே மெய்யான இரட்சகர். நம்மைக் குணப்படுத்தி இரட்சித்தருளுமென்று சொல்லி எப்பொழுதும் உண்மையாக அவரிலே நம்பிக்கை வைத்திருப்பதே விசுவாசிப்பதாம். ஆகையினாலே நீரும் பாவியாய் இருக்கிறீரென்றும் அதினால் நரக ஆக்கினைக்கு ஏதுவாயிருக்கிறீரென்றுங் கண்டு உண்மையான நன்மையைத் தேட ஆசை கொண்டிருந்தால் அந்த ஆசை அவமாய்ப் போகாதபடிக்கு இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவைப் பற்றி விசுவாசிக்க வேண்டும். அப்படி விசுவாசிக்கிறதற்குப் பரிசுத்த ஆவியானவர் உமது மனந் தெளியும்படி அனுக்கிரகஞ் செய்யத்தக்கதாய் நாங்களும் பராபரனைப் பார்த்துப் பிராத்தித்துக் கொள்வோமென்று

சொல்லிப் பிராத்தித்துக்கொண்டார்கள்.

அப்பொழுது அந்தப் பிராமணன் அழுத கண்ணீரோடே அண்ணாந்து கைகளை உயர்த்திக்கொண்டு இயேசுவே, என் ஆத்துமா ஈடேறும்படி உம்மை உண்மையாய் விசுவாசிக்க எனக்கு அருளிச்செய்யுமென்று வேண்டுதல் பண்ணிக் குருமாரிடத்தில் விடையும் பெற்றுக்கொண்டுபோனார்.

மேலும் அவருடைய விசுவாசம் அந்த நாள் முதல் அதிகமதிகமாகக் கதித்து வர்த்தித்தது. சில மாதஞ்செல்ல ஞானஸ்நானம்பெற்றுக் கிறிஸ்தவனாகிச் சுவிசேஷங்களைச் சனங்களுக்குப் பிரசங்கித்துப் போதகம் பண்ணிக்கொண்டிருந்தார்.

இந்த அடைவாகப் பிராமணன் தன் அவபத்தியை வெறுத்துப் பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு இயேசுக்கிறிஸ்துவை அண்டிக்கொண்டு கிறிஸ்துமார்க்கத்துள் அமைந்து மகிழ்ச்சி அடைந்திருந்தான். ஆனதினாலே இதை வாசிக்கிற நீங்களும் உங்கள் பாவத்தையும் அதினால் உங்களுக்கு வருகிற நிடுகூரான வேதனையையும் அறிந்து பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு இரட்சகர்மேல் விசுவாசித்து மோட்சத்தைப் பெற்றுக்கொள்ளத் தேடுங்கள்.

---

### வேதவாக்கியங்கள்.

யூதருக்குள்ளே தலைவனாக நீக்கோதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராத்திரிகாலத்திலே இயேசுவிடத்தில்

போய் இரபீ, தன்னுடனே பராபரனிராவிட்
டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்க
ளைப் போல ஒருவனுஞ் செய்யமாட்டான். ஆ
கையால் நீர் பராபரனாலே வந்த போதகரென்
று அறிந்திருக்கிறோமென்றான். இயேசுவான
வர் அவனை நோக்கி ஒருவன் மறுபடியும் பிற
வாவிட்டாற் பராபரனுடைய இராச்சியத்தை
ப் பார்க்கமாட்டானென்று மெய்யாகவே உ
மக்குச் சொல்லுகிறேனென்றார். அதற்கு நி
க்கோதேமு முதுமையுள்ள ஒருமனிதன் (ம
றுபடியும்) எப்படிப் பிறப்பான்? அவன் இர
ண்டாந் தரந் தன்னுடைய தாயின் வயிற்றிற் பி
ரவேசித்துப் பிறக்கக் கூடுமா? என்றான். இ
யேசுவானவர் சொன்னது, ஒருவன் சலத்தினா
லும் ஆவியினாலும் பிறவாவிட்டாற் பராபரனு
டைய இராச்சியத்திற் பிரவேசிக்கமாட்டானெ
ன்று மெய்யாகவே உமக்குச் சொல்லுகிறேன்.
மாமிசத்தினாற் பிறப்பது மாமிசமாய் இருக்கு
ம். ஆவியினாற் பிறப்பது ஆவியாய் இருக்கும்.
நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று
நான் உமக்குச் சொன்னதைக் குறித்து நீர் அ
திசயப்படவேண்டுவதில்லை. (யோவான் ௩. அ
திகாரம் ௧—௭.)

முற்றிற்று.